## நிலைபெறுதகு விவசாய நிகழ்ச்சித்திட்டம் (FSSP) - விவசாய கடன் திட்டம்
## கடன் விண்ணப்பதாரருக்கான அறிவுறுத்தல்கள்

நீங்கள் விவசாய துறையிலோ அல்லது விவசாய பெறுமான சங்கிலிகளுடன் தொடர்புடைய பயிரிடல், தொழில் முயற்சி அல்லது வணிகத்தில் ஈடுபடுபவராக இருந்தால், 5% குறைந்த வட்டியிலான கடன் வசதிக்காக நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தை தேவையான வடிவங்களுடன் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும் அல்லது இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யவும்.
2. உங்கள் வணிக / தொழில் முயற்சி திட்டத்தை முழுமையாக தயாரிக்கவும்.
3. திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப, தொடர்புடைய துறையின் தொழில்நுட்ப அதிகாரியை சந்தித்து பரிந்துரை பெறவும் (உ+ம்: - விவசாய ஆலோசகர், கால்நடை அபிவிருத்தி ஆலோசகர், ஏற்றுமதி விவசாய விரிவாக்க அதிகாரி, மகாவலி கள உதவியாளர் போன்றோர்.
4. விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பவும்.
5. தொழில்நுட்ப அதிகாரி பரிந்துரைத்த வணிக / தொழில் முயற்சி திட்டத்துடன் விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். விண்ணப்பத்தை அதிகாரி பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் கடிதம் வழங்கப்படும்.
6. பிரதேச செயலாளர் பரிந்துரைத்த விண்ணப்பம் உங்களிடம் வழங்கப்படும்.
7. பிரதேச செயலாளர் பரிந்துரைத்த அந்த விண்ணப்பத்தை, வங்கியால் கோரப்படும் அனைத்து ஆவணங்களுடனும் உங்கள் வங்கியில் சமர்ப்பிக்கவும்.

*கடன் பெறுவது தொடர்பாக உங்கள் வங்கியுடன் முன்கூட்டியே ஆலோசித்து, அதற்கான நிதி தொடர்பான தடைகள் உள்ளனவா மற்றும் வங்கி சாதகமான ஒப்புதலைக் காட்டுகிறதா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்வது தாமதங்களைத் தவிர்க்க உதவும்.*

**தொகை கடன்களுக்காக**

1. நீங்கள் விவசாயிகள் குழுவாக / கூட்டாக ஒன்று சேரவும்.
2. நீங்கள் உறுப்பினராக உள்ள கூட்டுறவு சங்கங்கள், சணச சங்கங்கள், கமநல வங்கிகள் மற்றும் சமுர்த்தி வங்கிகள் (இடைநிலை நிதி நிறுவனங்கள்) மூலம் கடனுக்காக விண்ணப்பிக்கவும்.
3. அந்த இடைநிலை நிதி நிறுவனம் ஒரு வங்கியின் மூலம் உங்களுக்கு கடன் வழங்க முன்வரலாம்.
4. இதற்காக, உங்கள் தனிப்பட்ட விண்ணப்பம் மற்றும் குழு விண்ணப்பதாரர்களின் விவரங்கள் அடங்கிய குழு விண்ணப்பத்தையும் மேற்கண்ட இடைநிலை நிதி நிறுவனத்தின் மூலம் அங்கீகாரத்திற்காக பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.
5. குழு விண்ணப்பத்தை பரிந்துரைக்க மேலே குறிப்பிடப்பட்ட அதே நடைமுறையைப் பின்பற்றவும்.